செ.வெ.எண்.51 நாள்:19.03.2019

**தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தேர்தல் செலவின பார்வையாளர்கள் திரு.ஆகாஷ் சிங்கை, I.R.S., திரு.அபிஜித் அதிகாரி, I.R.S., வருமான வரி கண்காணிப்பு அலுவலர் செல்வி.கார்த்திகா அவர்கள் ஆகியோர் தேர்தல் கண்காணிப்பு பணியில் ஈடுபடும் அலுவலர்களுடன் ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தேர்தல் செலவின பார்வையாளர்கள் திரு.ஆகாஷ் சிங்கை, I.R.S., அவர்கள், திரு.அபிஜித் அதிகாரி, I.R.S., அவர்கள், வருமான வரி கண்காணிப்பு அலுவலர் செல்வி.கார்த்திகா அவர்கள் ஆகியோர் தேர்தல் கண்காணிப்பு பணியில் ஈடுபடும் அலுவலர்களுடன் ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (19.03.2019) நடைபெற்றது.

கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் பேசியதாவது:-

இந்திய தேர்தல் ஆணையம், தமிழகத்தில் ஒரே கட்டமாக நாடாளுமன்ற பொதுத்தேர்தல் மற்றும் சட்டமன்ற இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு ஏப்ரல் 18ம் தேதி நடைபெறும் என்று அறிவித்துள்ளது. அதனைத்தொடர்ந்து உடனடியாக தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்துள்ளது. அன்றைய நாளிலிருந்து பறக்கும்படை அலுவலர்கள், நிலையான குழு அலுவலர்கள், வீடியோ கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் வீடியோ பதிவு செய்யும் அலுவலர்கள் ஆகியோர் தேர்தல் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். கண்காணிப்பு அலுவலர்கள் புகார்கள் ஏதேனும் வரும்பட்சத்தில் உடனடியாக அப்பகுதிக்கு சென்று ஆய்வு செய்து புகார்கள் உறுதி செய்யப்பட்டால் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

நமது மாவட்டத்தில் உள்ள கோவில்பட்டி, விளாத்திகுளம், ஓட்டப்பிடாரம் ஆகிய தொகுதி பகுதிகளில் மேற்கொள்ளும் வேட்பாளர்களின் தேர்தல் தொடர்பான செலவுகளை கண்காணிக்க தேர்தல் செலவின பார்வையாளர் திரு.ஆகாஷ் சிங்கை, I.R.S., அவர்களும், தூத்துக்குடி, திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம் ஆகிய தொகுதி பகுதிகளில் வேட்பாளர்களின் மேற்கொள்ளும் தேர்தல் தொடர்பான செலவுகளை கண்காணிக்க தேர்தல் செலவின பார்வையாளர் திரு.அபிஜித் அதிகாரி, I.R.S., அவர்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் தேர்தல் தொடர்பான வேட்பாளர்கள் மேற்கொள்ளும் செலவுகளை கண்காணிப்பார்கள். எனவே, தேர்தல் தொடர்பான ஒவ்வொரு வேட்பாளரின் செலவுகளை கணக்கிடும்போது மிக கவனத்துடன் பணியாற்ற வேண்டும்.

இந்திய தேர்தல் ஆணையம், பொதுமக்கள் C Vigil App மூலமும் புகார்களை அளிக்கலாம் என தெரிவித்துள்ளது. அவ்வாறு அளிக்கப்படும் புகார்கள்மீது 15 நிமிடத்திற்குள் நேரடியாக சென்று உரிய நடவடிக்கை மேற்கொண்டு 100 நிமிடத்திற்குள் புகார்கள்மீது எடுக்கப்பட்ட நடிவடிக்கை குறித்து C Vigil App-ல் பதிவேற்றம் செய்ய வேண்டும். மாவட்ட தேர்தல் கட்டுப்பாட்டு அறைக்கு பெறப்படும் புகார்கள்மீதும், இலவச தொலைபேசி எண் 1950 பெறப்படும் புகார்கள்மீதும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். வாகன சோதனையில் ஈடுபடும்போது அனைத்து காட்சிகளையும் வீடியோ பதிவு செய்ய வேண்டும். பணம் அல்லது பரிசுபொருட்கள் வாகன சோதனையில் கண்டறியப்பட்டால் அந்த பொருட்களுக்கான உரிய ஆவணங்கள் உள்ளதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும். உரிய ஆவணங்கள் இல்லாமல் விலை மதிப்பு கூடிய பொருட்கள் இருந்தால் உடனடியாக

தெரியப்படுத்த வேண்டும். அனைவரும் இந்திய தேர்தல் ஆணையத்தின் கட்டுபாட்டில் உள்ளதால் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகளை சிறப்பாக ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் பேசினார்.

அதனைத்தொடர்ந்து, தேர்தல் செலவின பார்வையாளர்கள் திரு.ஆகாஷ் சிங்கை, I.R.S., அவர்கள், திரு.அபிஜித் அதிகாரி, I.R.S., அவர்கள் ஆகியோர் பறக்கும்படை அலுவலர்கள், நிலையான குழு அலுவலர்கள், வீடியோ கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் வீடியோ பதிவு செய்யும் அலுவலர்கள் ஆகியோருடன் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தேர்தல் பணிகள் குறித்து கேட்டறிந்தார்கள். மேலும், தேர்தல் பணிகள் குறித்து சந்தேகங்கள் இருக்கும்பட்சத்தில் உடனடியாக கேட்டறிந்து தெளிவுப்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும், வாகன சோதனையில் ஈடுபடும் அலுவலர்கள் நிலையாக ஒரே இடத்தில் சோதனையில் ஈடுபடாமல் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகளில் வெவ்வேறு இடங்களில் சோதனை பணியில் ஈடுபட வேண்டும் தெரிவித்தார்கள்.

மேலும், கோவில்பட்டி, விளாத்திகுளம், ஓட்டப்பிடாரம் ஆகிய தொகுதி மக்கள் தேர்தல் செலவின புகார்களை, தேர்தல் செலவின பார்வையாளர் திரு.ஆகாஷ் சிங்கை, I.R.S., அவர்களின் அலைபேசி எண் 6381424955-ம், தூத்துக்குடி, திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம் ஆகிய தொகுதி மக்கள் தேர்தல் செலவின புகார்களை, தேர்தல் செலவின பார்வையாளர் திரு.அபிஜித் அதிகாரி, I.R.S., அவர்களின் அலைபேசி எண் 6381338386-ம் தொடர்பு கொள்ளலாம். மேலும், தேர்தல் செலவின புகார்களை பொதுமக்கள், பழைய மாநகராட்சி அலுவலகம் அருகில் உள்ள புதிய சுற்றுலா மாளிகையில் தேர்தல் செலவின பார்வையாளர்களிடம் நேரில் சென்றும் தெரிவிக்கலாம்.

கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.முரளிரம்பா, இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர் மு.வீரப்பன், தூத்துக்குடி சார் ஆட்சியர் திரு.சிம்ரான் ஜீத் சிங் கலோன், இ.ஆ.ப., உதவி ஆட்சியர் (பயிற்சி) மரு.அனு, இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.தனபதி மற்றும் உதவி செலவின கண்காணிப்பு அலுவலர்கள், பறக்கும்படை அலுவலர்கள், நிலையான குழு அலுவலர்கள், வீடியோ கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் வீடியோ பதிவு செய்யும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.